# ஃபீனிக்ஸ்

நவீன தமிழ் கவிதா இதழ் - 1
- 1996



பிறப்பிலும் பறப்போம்
இறப்பிலும் உயிர்ப்போம்

ஆசிரியர் : வி. மைக்கல் கொலின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பயங்கரவாதிகளின் சுயம்வரம்

நெப்போலியன் போனப்பாட்
விளாடிமீர் லெனின்
இளைஞன் பகவத் சிங்
சீனாவின் மாசேதுங்
சிம்பாவே முகாபே
ஆபிரிக்க மண்டேலா
பலஸ்தீனத்து அரபாத்

அத்தனை பேரும்
பயங்கர வாதிகளாய்
பிரகடனம் ஆனவர்கள்

துப்பாக்கிக் குழலுக்கு
நேரெதிரே வாழ்ந்தவர்கள்

அகராதிகளில் அர்த்தங்கள் மாறாமல்
ஐ.நா. வின் பிரேரணைகள் கோராமல்
தேசியத் தலைவர்களாய்
நேசிக்கப் பட்டவர்கள்
அரியாசனங்களில்
அமர்த்தப் பட்டவர்கள்

ஏனாயின் இவர்கள்
சூன்யத்தை வைத்து
சைன்யம் ஆக்கியோர்கள்
புணர்ச்சி இன்பம் காணாது
பிள்ளையைச் சுமந்தவர்கள்
மக்களை மட்டுமே
மனதில் நிறைத்தவர்கள்

என்னைப்
"பயங்கரவாதி" என்று
உரைப்பில்
நன்றி சொல்வேன்.

– பந்தனம்

# ஆசிரியர் தலையங்கம்



EDITORIAL

## ஆசிரியர் குழு அறிமுகம்

அன்பான வாசகர்களுக்கு வணக்கம்!

ஃபீனிக்ஸ் –
நவீன தமிழ்க் கவிதா இதழின் ஆரம்ப இதழ் மூலம் உங்களைச் சந்திக்கின்றேன். நாட்டியம், நாடகம், சங்கீதம், சிற்பம், ஓவியம், சினிமா போன்ற எவற்றையும் நாம் கலையாகப் பாவிக்கவில்லை. ஒரு தொழில் முறையாகத் தான் இன்றுவரை பாவித்து வருகிறோம். இலக்கியமும் இதற்கு விதிவிலக்கல்ல. "நமக்குத் தொழில் கவிதை" என்று எல்லாவற்றையும் நாம் வர்க்கக நோக்கின் அடிப்படையில்தான் அணுகி வந்திருக்கிறோம். இந்நிலையில், அசுரத்தனமான வியாபார சுழலுக்குள் சிக்குப்பட்டிருக்கும் இன்றைய பத்திரிகா சூழலில் ஃபீனிக்ஸின் தொடர்ச்சியான வருகை பற்றியும், அதன் கால எல்லைகள் பற்றியும், உங்களுக்குப் போலித் தனமான உறுதி மொழிகளைத்தர நாங்கள் தயாராக இல்லை.

ஃபீனிக்ஸ் இன் வருகையும், அதன் தேவைப்பாடும் உணரப்படும் காலங்களில் எல்லாம் எங்கிருந்தாலும் அது சிறகு விரிக்க முயற்சி செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று, தமிழ்க்கவிதையின் வளர்ச்சி இலக்கிய உலகின் வெட்பசுட்பங்களைத் தாண்டி வெகு தூரத்திற்குச் சென்று கொண்டிருப்பது உண்மை. அதற்காக, தமிழகத்தை விட கவிதைத்துறையில் ஈழம் வளர்ச்சியடைந்துவிட்டது என்று அப்பட்ட மான பொய் சொல்லித்திரிய வேண்டிய அவசியம் எமக்கில்லையாயினும், ஈழத்து நவீன தமிழ்க் கவிதையில் புதிய தேடல்களை அகழ்க்க வேண்டியவர்களாக எம்மை உணர்ந்து கொண்டுள்ளோம். எம்மைப் பொறுத்தவரை கவிதை என்பது உண்மையாக இருக்க வேண்டும். போலித்தனமான வார்த்தைப் பிரயோகங்களும், இறுக்கம், செறிவு என்றும், அழ்மனப்பிரபஞ்சத்தேடல் என்றும், மேதாவித்தனங்களைச் சுமந்த கவிதைப் பாவியை புறந்தள்ளி வாழ்வின் அனுபவங்களின் ஊடாக, உண்மையாக வெளிக்கிளம்பி விதைக்கப்படும் கவிதைக(ள்)ளை காலம் சொல்லும்.

எமது தேடலின் வெளிப்பாடே இந்த 'பீனிக்ஸ்'. எம்முடன் சேர்ந்து நீங்களும் தேடுங்கள்.

சிலவேளை, நாளைய தமிழ்க்கவிதையின் உச்சத்தில் நாம் பறந்துகொண்டிருக்கலாம்.

அன்புடன்....
வி. மைக்கல் கொலின்,
(ஆசிரியர் – பீனிக்ஸ்)

***************

# அக்கினிக் குஞ்சு

அக்கினி குஞ்சொன்று கண்டேன், – அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்:
வெந்து தணிந்தது காடு; – தழல்
வீரத்திற் குஞ்சென்று மூப்பென்று முண்டோ?
தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்.

பாரதி





# ஒரு கடிதம்

ஊரிலுள்ள உனக்கு
நான் எழுதுவது...
தொடங்கியுள்ள சண்டை பற்றிய
மனப்பீதியைத் தவிர,
வேறெதுவும் இன்றி நலமாய் இருப்பாய் என
நினைக்கிறேன்....
நம்மூரிலிருந்தே தொடங்கிய
இந்த மூன்றாவது போர்
நல்ல பயத்தை தந்திருக்கும்...
ஊருக்குள் இருக்கிற
சொந்த வீட்டைவிட்டு,
ஓரமாய், ஒரு குடிசைக்குள்
ஒண்டிப்போயிருக்கும் உனக்காகவும்,
உன் வீட்டாருக்காகவும்
கவலைப்படுவதையும்
முடிந்தபோது பிரார்த்திப்பதையும் தவிர
வேறெதனையும் என்னால் செய்யமுடிவதில்லை....
பழையபடி.... குண்டுச்சத்தமும்...,
துவக்குச் சத்தமும் கேட்கத் தொடங்கியிருக்கும்...
முன்பும் கேட்டதுதான்....
ஓர் அமைதியான இடைவெளிக்குப்பின் கேட்பது
என்னவோ போலிருக்கும் தானே...,
அடிக்கடி கிடைக்கிற செய்திகளால்
உன்னையும் அடிக்கடி நினைக்க
முடியுமாயிருக்கிறது....
சாவுகள் கூடும் போது
உயிர்வாழ்தல் பற்றிய அக்கறை
கூடிப்போய்விடுகிறது....
வீட்டுக்கண்மையில் இருக்கும்
பொலிஸ் ஸ்டேசன்... இலக்குவைக்கப்பட்டிருக்கலாம்.
பாதுகாப்பும் பயமாகிவிட்டது...
யுத்த நாட்களின் பீதியான அலைச்சலுக்காய்
மூட்டை முடிச்சு கட்டியிருப்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு அநேகம் பேர்
சமாதானம் பற்றிய நம்பிக்கையில் இருக்கிறார்கள்.
நீங்கள் நன்றாக இருக்கவேணும் என்ற
சுயநலத்தனமான ஆசையில்...
எனக்கும்... சமாதானம் பற்றிய
சிறு நப்பாசை இருக்கிறது
சுவரெங்கும் ஒட்டப்பட்டிருக்கும்
'போஸ்டர்'களை...
சம்பந்தப்பட்டவர்களும்...., வேண்டப்பட்டவர்களும்
பார்ப்பதாக இல்லை...
தினமும் புதுசு.... புதுசாய் போஸ்டர்கள்....
புறாக்கள் சுவர்களில் பறக்கின்றன....,
சமாதானத்தின் தேவையும்...,
எல்லாவற்றிற்குமான ஒரு சுபமான முடிவும்...,
இங்கிருப்பவர்ககளை விட
அங்கிருக்கிற உங்களுக்குத்தான்
அதிகமாய் உணர்ந்து கொள்ள முடியுமாயிருக்கும்.
நாளையும் நாங்கள் இங்கே...
சமாதானம் வேண்டி
நடுவெய்யிலில் காயப் போகிறோம்....
சண்டை நடக்கிற இடத்தையும்விட்டு,
சண்டை பிடிக்கிற ஆட்களையும் விட்டு...,
அங்கிருந்து எப்படி சமாதானம் வாறது......
என்று நீ கேட்கலாம்...,
அது அப்படித்தான்.... கேள்விகள் கேட்காதே...
சமாதானம் வந்தால்... அது...
இங்கிருந்து, நாங்கள் அனுப்பியதாக
நினைத்துக்கொள்....
அதன் பிறகுதான் நாமும் அங்கு வருவோம்...
நானுட்பட, நாங்கள் அங்கேயும்,
வேறிடங்களுக்கும் செல்வதற்காய்
''சமாதானத்திற்கான அழுத்தத்தை''
முடிந்தவரை பிரயோகிப்போம்.
இங்கும்..
ஆயுதம் இன்றி மோதிக்கொள்கிறார்கள்,







சிலபோதுகளில்
தலைமுடியை பிய்த்துக்கொள்ளவேண்டும் போலிருக்கிறது,
இன்றும் இருவர்
சமாதானம் பற்றிச் சர்ச்சைப்பட்டுக்கொண்டார்கள்
எமது அரசியல்வாதிகளைப் போல்,
நானும்
இதிலிருந்து நழுவிவிட்டேன்...
சமாதானம்..., அமைதி எல்லாம் தேவைதான்...
நீ - நான்...
எல்லாரும் விரும்புவதும் ... அதைத்தான்...
மீண்டும் சண்டைபிடிப்பதற்காய்...
சமாதானமாகிப் போகிறார்கள் இப்போது....
" சண்டை ஓய்ந்து சமாதானமாகணும்,
அல்லது
சண்டை பிடித்து வெற்றி பெறணும் "
ஒவ்வொருவரும் ஒவ்வொன்றாய்ச் சொல்கிறார்கள்....
நடக்கப்போவதை
பொறுத்திருந்துதான் பார்க்கவேணும்...
நீங்களெல்லாம் கவனமாயிருங்கள்...
''பொதுமக்கள்'' என்றபடியால்
மிகவும் கவனமாய்த்தான் இருக்கவேண்டும்....
இங்கு மழை பெய்கிறது...
ரூமில் பழமையான ஒழுக்குகளைத்தவிர
வேறில்லை...
'ரூம்மேட்' ஊர்போய்விட்டான்...
வேறில்லை எழுத...
செய்திகள் எனக்கு கிடைத்துக் கொண்டேயிருக்கும்,
நீ அதல்லாத பதில்போடு...
இது
கொழும்பிலிருக்கிற நான்.



27.04.1995

எம்.கே.எம். ஷகீப்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புள்ள காதலனுக்கு

என்னைக் கோபித்து
நீ இட்ட
கடிதம் கண்டேன் !
நீ கோபித்தாலும்
நான் மகிழ்ச்சிப் படுகின்றேன் !

இங்கிருந்து நீ சென்றபோது
இடைவழிகளில் –
விசாரணைக்கென்று
வீணாய் அழைத்துச் செல்லப் படாமல்
சுகமாய்ப் போய்ச்
சேர்ந்ததை எண்ணி !

இந்த மண்ணை விட்டு
திருமணத்திற்காய்
வேறு தேசம் வரச் சொன்னாய் !

மன்னித்து விடு
சொந்த மண்ணை விட்டுச்
சொர்க்கம் வேறில்லை எனக்கு !

காலம் –
காயங்களை மட்டும்தான் தருகிறது !
சொந்த மண்ணில்
சுகம் காணும்
ஒரு காலம் வரும் வரை
நான் உனக்காகக்
காத்திருப்பேன் !

அது வரையில்
உன் கோபம் கூட
எனக்குச் சுகமானதுதான்

அழகான ஓர் அந்திப் பொழுதில் –
கடற்கரை மணல் அளைந்து
காதல் கவி
பாடச்சொன்னவனே .. கேள் !

அந்த அழகில்
மயங்க முடியாமல்,,
உன் அன்பில்
நனைய முடியாமல்
காதல் கவிதை
பாட முடியாமல்
நான் கலங்கியது
ஏனென்றால் –

நமக்குப் பின்னே –
கடற்கரையில் கூட
கைது செய்தல் நடக்கிறது !

நீ கூட
அவர்களால் அழைக்கப் படலாம் !
சில நேரங்களில் –
அவர்கள் தேடுகிற
மனிதனின்
முகத்தைப் போன்றதாக
உன் முகமும் இருக்கலாம் !

அதனால்த்தான் –
காதல் கூட
எனக்குக் கலைந்து போனது !
பீதியும் சோகமும்
நிறைந்து போனது !

என் அன்பான காதலனே ;
என்னைப் புரிந்து கொள்
உன்னை அனுப்பி வைப்பதில்
அவசரம் காட்டியதே
அன்பினால்த்தானே !

கடல் கடந்து –
என் காதலைச் சுமந்து
சென்றாய் !
என் இதயத்தையும்தான்
சொந்த மண்ணில் –
சுகம் காணும்
ஒரு காலம் வரும்வரை
நான் உனக்காகக்
காத்திருப்பேன் !

– அஷ்ரபா நூர்டீன் –





ஜபாரின்:
## " தரப்பட்டுள்ள அவகாசம் "
## சில குறிப்புகள்
– மைதிலி –

கவிதை என்றால் என்ன.....? ஈழத்தில் தமிழ் கவிதையின் இன்றைய நிலை என்ன.....? என்ற இரண்டு வினாக்களை எழுப்புவதன் மூலம் இக்குறிப்பை ஆரம்பிக்கலாம் என்று நினைக்கின்றேன். கவிதைக்கு நிறையப்பேர் நிறைய வரைவிலக்கணம் கூறி உள்ளனர். ஆரம்ப காலங்களில் உணர்ச்சியை மையம் வைத்து ஆக்கப்பட்ட கவிதை இன்று உணர்வுடன் கருத்துநிலைக்கு முக்கியம் தருகின்றது. அறிவியலின் உணர்ச்சிப் போக்கிற்கு ஏற்ப கவிதையும் தன் புதிய பரிமாணம் நோக்கிய பாதையில் இன்று காலடி எடுத்து வைத்துள்ளது என்பது மறுக்க முடியாதது.

வாழ்பனுவங்களை நிகழ்வுகளை படம் பிடிப்பது கவிதை. கவிதை இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற வரட்டு பிடிவாதமோ, வரைவிலக்கணமோ தொடுக்கும் முயற்சி இல்லையாயினும் கவிதை கவிதையாக இருக்க வேண்டும் என்ற நக்கீர பார்வை உண்டு.

ஈழத்தின் தமிழ் கவிதை தமிழகக்கவிதைகளுடன் ஒப்பிடுகையில் ஓரளவு வளர்ச்சிப் போக்கு காட்டி வருவது உண்மை. இதன் ஆரம்பம் எங்கே என்று அடிமுடி தேடினால் அதன் ஆரம்பம் தமிழ் விடுதலை இயக்க போராளிகளின் அஞ்சலி கவிதைகளிலேயே ஆரம்பித்தது. இது மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மை.

சில பல்கலைக்கழக விரிவுரையாளர்களும், இலக்கிய ஆய்வாளர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களும் தமது விருப்பு வெறுப்புக்கு ஏற்ப சில பெயர்களை பட்டியல் போட்டாலும் கவிதை என்னவோ இந்த பட்டியலை தாண்டி வெளியில்தான் உயிர் வாழ்கிறது.

சேரர்களையும், கிளிகளையும், தமது பிதாமகர்களாக நினைத்துக் கொண்டு உலகக் கவிதைத் தரத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துத்தமிழ் கவிதை வளர்ந்து விட்டது என்று நட்சத்திர கனவு காண்பது கவிதையின் ஆத்துமாவையே கொலை செய்வதற்கு சமமானது. இந்நிலையில்தான் ஜபாரின் 'தரப்பட்டுள்ள அவகாசத்தின்' வரவு நிகழ்ந்துள்ளது.


வாழ்தல் பற்றிய திடமான நம்பிக்கை கொண்டு வாழ்வின் மீதான தீராக்காதல் கொண்ட ஜபாரின் இத்தொகுப்புக்கு மு.பொன்னம்பலத்தின் சட்டைக் கட்டும் முன்னுரை சில சந்தேகங்களை எழுப்புவதை தவிர்த்திருக்கலாம்.

''திறக்கப்படாத தீப்பெட்டிகளை'' பத்து வருடங்களுக்கு முன்னர் தந்த அதே ஜபார் 'தரப்பட்டுள்ள அவகாசத்தில்' புதிய தோற்றம் காட்டுகிறார். இத்தொகுதியில் உள்ள அநேக கவிதைகள் ஆழமான தேடல் நிறைந்த தத்துவப் பார்வை கொண்டது. தமிழ் கவிஞர்களான தேவதச்சன், தேவதேவன், காசிபன்,ஆனந்த், ஆத்மநாம் போன்றவர்களின் வழித்தடங்களில் பயணிக்கும் ஜபாரின் கவிதைகள் அதிகமாக ஆத்மநாமின் கவிதைப்பாணியுடன் கை கோர்க்கிறது.

''இது பசி இது விரகம் / இது வறுமை இது சரண்டல் / இது காயம் இது ரத்தம் / இது துப்பாக்கி இது மரணம் / இது துயரம் இது கண்ணீர் / இது விரக்தி இது தற்கொலை / இது அவஸ்தை இது போராட்டம் / இது வெளி இது வரம்பு/ இது கடல் இது மழை / இது வெளிச்சம் இது பனித்துளி / இது பறவை இது பாட்டு / இது காற்று இது மூச்சு/சலித்து சோர்வுற்று சாகலாம் போலிருக்கிறதா / மூதேவி / வாழ்க்கை உனக்குப் புரியப் போவதில்லை / போ.''

இறுதியாக – இன்னமும் மிருகக்காட்சி சாலைக்குள்ளும், சோலைகளுக்குள்ளும்,பூனைகளோடும், நாய்களோடும் மலம் தின்று, மாட்டுக்கு பேன் பார்த்து, நிலக்கரி ரயிலில் பனி – மலைகளுக்குள் பயணித்துக் கொண்டிருக்கும் கவிதை வெளிச்ச வீதிக்கு வந்து மக்களோடு பயணிக்கும் கவிதையாக ஒரு புத்திஜீவி கவிஞனை இனம் காட்டும் கவிதைகளாக ''தரப்பட்டுள்ள அவகாசத்தின் '' அந்த கணத்திலாவது கவிதை கவிதையாக உயிர் வாழட்டும்.





காட்டுவேன்
இன்னுமின்னுமென் முகத்தைக்
காட்டுவேன்.......
எலலோருக்கும் நல்லவனாய்
நடித்துச் செத்த
நாட்கள் பறந்தன......
இனி உயிர்ப்பு
நாளும் நாளும்
புதிது புதிதாய் என் முகம் துளிர்க்கும்

என் பசியின்
கனம் தாங்காது
சிதறியது பூந்தொட்டி.......
ஆழ்ந்து வேரோடி
உறிஞ்சும் அமுதமெல்லாம்
செயலாய் துளிர்த்துச் செளிக்க
மண்ணில் வேர்கொள்ளும் மனிதன் நான்

என் தாயே ! நீ சொல்
என் கனவுகளில்
மண்ணள்ளிப் போட்டவன் என்று
தந்தையே ! நீ சொல்
தலை குனிய வைத்தவன் என்று
உடன் பிறப்புகளே !
சொல்லுங்கள்
உதவாக்கறை என்று



ஏய்ப்பவன் மேய்ந்து செல்ல
என் வாழ்வை
பதமாய் அவித்து
தட்டில் வைத்து ஏந்தியபடி
உங்கள் வரிசையில்
நிற்பேன் என்றா நினைத்தீர்கள்

இயற்கை எனக்களித்த
காணிக்கை என் வாழ்வு
வாழ்ந்து தீர்ப்பேன்
வாழ்ந்தேதான் தீர்ப்பேன் நான்.
●

– வாசுதேவன் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்வு....

எம்
வதிவிடங்கள் தாண்டி
உள்ளே வந்தார்கள்
குருவிக் கூட்டைப் போல்
கட்டியிருந்த
எங்கள் வாழ்விடம்
கண நேரத்தில்
கலைக்கப்பட்டது.

எனது மூதாதையர்கள்
அள்ளிப் பருகிய
கிணற்று நீரெங்கும்
ரத்தம் ஊற்றெடுத்தது.

வளவுகள் -
தாண்டிப் பாயும்
எம் கிராமத்து ஓடையெங்கும்
மனித உடல்கள்
அணைகளாய் நின்றன

நானும் அவளும்
கூடிக் கழித்த
அந்த பூவரசமர
விழுதுகள் எங்கும்
மனிதத் தசைகள்
அப்பிக் கிடந்தன

முன்னேறி
முன்னேறி
அவர்கள் வந்தார்கள்
தகர்த்தெறியப் பட்ட
தேவாலயத்தின் ஊடே

எம் மக்கள் எல்லாம்
இடம் பெயர்ந்தார்கள்
துஷ்டரைக் கண்டு
தூர விலகுவது போல்

திடீரென ஓர் நாள்
அது நிகழ்ந்தது
எங்கள் பையன்கள்
அவர்களோடு மோதிப் பார்த்தார்கள்


எமக்கு -
ஒன்று மட்டும் புரிந்தது
ஓடுவது இன்னமும்
அதிக காலத்திற்கு , அல்ல.

● மைதிலி

## உங்களுக்கு இப்படி ஏதும்!

எனக்கு வர்ற ஆத்திரத்திற்கு.....
சீ......
கவலையாக கிடக்கு ,
நான்
மாடென்றா முதல்ல
சமாதானப் போஸ்ரர்களைத்தான்
தின்னுவன்......... என
சலித்துக் கொண்டது மனம்.

இரண்டு எட்டு வைக்கல்ல
இன்னொரு போஸ்ரர்
வாசித்துத் திரும்பினன் !!
அடோ என்ன செய்ற......
பிறகென்ன......
மாடாகவா பிறக்கணும்
நீயும் தின்னலாம் , என்ற
அனுபவம்
கிடைச்சுது
●
இரா. குணசீலன்



யாருடனும் பேசவில்லை.
வளர்ப்பு நாயாய்
எல்லோர் முகத்தையும்
அண்ணாந்து பார்த்த
அவ்விடத்திலேயே
நின்று கொண்டேன்.

எனக்குண்டான
வெப்பிசாரம் -
வெடித்து விடுமோவென
நெஞ்சு பதைக்கத.

இழவு வீட்டின் மூலையொன்றில்
சாம்பிராணியும் - சந்தனக் குச்சியும்
புகையை அள்ளி
மூக்கினுள் திணித்து மூச்சை அடைத்தன.

கூடத்தின் நடுவே போர்க்கப்பட்டதாய்
சின்னதாய் ஒரு சடலம்.
பாவம் இதையும்
அறிந்து விட்டார்களே பாவிகள்.

ஞாபகங்கள்
ஒன்றுக்கொன்றாய் வாய் மாறின.

அதிர்வில்லாமல் நடந்தேன்.
வெள்ளைத் துணியை விலக்கிப் பார்த்தேன்.
ரோஜா ஒன்று
வாடிப் போய் இருந்தது.
இழவு வீட்டில்
நான் யாருடனும் பேசவில்லை.
அந்தப்பூ மட்டும்
மனதுக்குள்.

****

ஓட்டமாவடி - அறபாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

∴பீனிக்ஸ் –
(நவீன தமிழ் கவிதா இதழ் 01)
1996.

ஆசிரியர்.
வீ. மைக்கல் கொலின்

அமைப்பு.
ஹரிஜேந்தினி மகேந்திரன்

ஆலோசனைக்குழு.
பேசுறெஜினோல்ட்
சியாமளாதேவி
வசந்தரூபி
எட்னா கிருபைராஜா
பிரபாகரன்
உதயகுமார்

வெளியீடு
∴பீனிக்ஸ் கலை இலக்கிய
அமைப்பு

ஓவியங்கள் : குணா, பிரபு

கவிதைகள் கருத்துக்கள் கடிதங்கள்
மற்றும் சகல தொடர்புகளுக்கும்

ஆசிரியர்
∴பீனிக்ஸ்
90 பார் வீதி
மட்டக்களப்பு


\- - - - - -
\- - - -
—

## கண்ணீர் அஞ்சலி

அமரர். சி பற்குணம்

அமரர். வீ ஆனந்தன்

( இரு இலக்கியவாதிகளின்
மறைவின் துயரில் ∴பீனிக்ஸ்
அமைப்பும் தன் ஆழ்ந்த
அனுதாபங்களைச்
சுமக்கிறது.)

\- - - - -
\- - -
—

## செத்துச்செத்து மீள்தல்

ஒவ்வொரு விடியலின் முழிப்பிலும்
என் முற்றத்தில் 'பூட்ஸ்கால்' முளைத்திருக்கும்
அந்த இரவுகளில்
காற்றுக்கூட வீச அஞ்சுகிறது
நாய்கள் கூடக் குரைப்பதில்லை
எங்கையோ தொலைவில்
சீறும் சில்லூறுகள் கூட
அவர்கள் வருவதைக் கண்டால்
வாயைப் பொத்தி உறங்கிவிடும்

இரண்டு மூன்று தரம்
சிறுநீர் கழிக்காவிட்டால்
நித்திரை வராத எனக்கு
சிறுநீர் குழாய் புடைத்து
சிறுநீர்ப்பை 'அன்னாயின்னா' யென்று
வெடிக்கும் பிரசவ வேதனையில்
ஒவ்வொரு இரவிலும் தவிக்கிறேன்

பக்கத்தில்
நுளம்பு வலைக்குள் படுக்கும்
நேற்று ஜனித்த சித்திராமட்டும்
வாயில் 'பிளாஸ்டர்' ஒட்டி
அமைதியாகத் தூங்கிறாள்
நானும் இப்படியிருந்திருக்கலாம்

எத்தனை நாளைக்கு
இப்படி வாழ்வது
மணிக்கூட்டைப் பார்த்து
இன்னும் நேரம் போகவில்லையா?
யன்னல் ஓட்டைக்குள்ளால் வானத்தைப் பார்த்து,
இன்னும் விடியவில்லையா?
என்று எத்தனை நாட்களுக்கு
செத்துச் செத்துச் மீள்வது.

●

ஆரையம்பதி த. மலர்ச்செல்வன்.

## பால் வெளித் தெருக்கள்

பிரபஞ்சப்பிரியன்.

கானல்நீர்
வெளிக்காட்டில்
காலத் தெருவினூடே
என் இருப்பைத்தேடும்
சுயாநுபவத்தில் நான்
விடிதல் வேண்டி
தினம் –
உன் ஞாபகக் கற்களில்
கால் இடறி. . . . . .


சுட்டெரிக்கும்
பால் வெளியில்
கிழிபட்டுத் தொங்கும்
கனவுகளைச் சுமந்து
யாத்திரை போகும் இவன் :

கண்ணீர்த் துளிகள் வழிகின்றன
ஸ்நேகி . . . . .
நீண்ட பாதையின்
இடைநடுவே
இடம்மாறிப் போனாயோ?

பாதை நோக்கிய என்தேடல்
சுயம் இழக்க வைப்பதாய்
உன் விழித்தல்.

ஊன் மௌனத்திரை விலக்கி
யதார்த்தம் நோக்கு.
நாளையாவது
உன் கரம்பற்றி
எமதான இருப்பை
உறுதி செய்ய மனம் துடிப்பன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காலகாலமாய்
காந்து வெளியெங்கும்
ஒரு பறவை அலைகிறது
நிரந்தரமாய் குடியிருக்க
ஒரு கூடு தேடி ...

– றஜேந்தினி.

விலை : 15/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org